# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2014.03.13

தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2014

பல்கலைக்கழக உபவேந்தர்கள்
வளாக அதிபதிகள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

**சீருடைத் துணிகள் மற்றும் தையல் கட்டணங்களுக்கான வருடாந்தப் படி.**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் தாபனச் சுற்றறிக்கைகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2013.12.03 ஆம் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2014.01.23 ஆம் திகதி கூடிய 888 ஆவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் கூட்டத்தில், பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் சீருடைகளுக்கு உரித்துடைய ஊழியர்களுக்கு சீருடைத் துணிகள் மற்றும் தையல் கட்டணங்களுக்குப் பதிலாக 2014.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் வருடாந்தம் 4000/= ரூபாவினை படியொன்றாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சீருடைத் துணிகள் மற்றும் தையல் கட்டணங்கள் செலுத்துவது சம்பந்தமாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் தாபனச் சுற்றறிக்கைகள், அச் சுற்றறிக்கைளின் ஏற்பாடுகளுக்கமைய ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சீருடைத் துணிகள் மற்றும் செலுத்தப்பட்டுள்ள தையல் கட்டணங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாதவாறு இரத்துச் செய்யப்படுகின்றது.

இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றேன்.

ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம

தலைவர்

பிரதிகள்:-

01. செயலாளர் - உயர் கல்வி அமைச்சு
02. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
03. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
04. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
05. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
06. பீடாதிபதிகள்
07. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
08. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
09. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/1/2